


# SRCAS PULSE

An IQAC Initiative

16th July, 2022




SRCASofficial

www.srcas.ac.in

# Student Achievement

## Silver Medal Winner in Shooting



D.Nadish (II B.Sc Biotechology) NCC Cadet attended Inter Directorate Shooting Competition held at Chandigarh, Punjab. He has participated in Junior men's 50m Open sight shooting event and won Silver Medal. He scored 518/ 600. He also selected for All India GV Mavlankar shooting competition.








# நம்ம கல்லூரியில் கிரிக்கெட் திருவிழா

## டி.என்.பி.எல். கிரிக்கெட் நேற்றைய போட்டியில் நெல்லை ராயல் கிங்ஸ் அணி வெற்றி

தமிழ்நாடு பிரீமியர் லீக் 19-வது போட்டியில் நேற்று நெல்லை ராயல் கிங்ஸ், ரூபி திருச்சி வாரியர்ஸ் அணிகள் நமது கல்லூரியின் மைதானத்தில் மோதின. டாஸ் வென்ற ரூபி திருச்சி வாரியர்ஸ் அணி, பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் செய்த நெல்லை ராயல் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 236 குவித்தது. அதிகபட்சமாக சஞ்சய் யாதவ் 103 ரன்கள் எடுத்தார். டி.என்.பி.எல் வரலாற்றில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஸ்கோர் இதுவே.

பின்னர் 237 ரன்களை இலக்காகக் கொண்டு ரூபி திருச்சி வாரியர்ஸ் அணி வீரர்கள் களம் இறங்கினர். ஆனால் முரளி விஜய் 121 ரன்கள் தவிர ஏனைய வீரர்கள் சொற்ப ரன்களுக்கு ஆட்டமிழந்தனர். இறுதியாக ரூபி திருச்சி வாரியர்ஸ் அணி 20 ஓவர்களுக்கு 7 விக்கெட்களை பறிகொடுத்து 170 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. ஒரு போட்டியில் இரண்டு இன்னிங்க்ஸ் இரு வீரர்கள் சதம் அடிக்கப்பட்ட போட்டி இதுவே ஆகும்.






Picture Courtesy: TNPL



# “கிரிக்கெட் போட்டிகளை முதல்முறையாக நேரில் பார்க்கிறோம்” -கோவை ரசிகர்கள் நெகிழ்ச்சி

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில், 6-வது தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் (டி.என்.பி.எல்.), நமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. கிரிக்கெட் ரசிகர்கள் நாள்தோறும் நமது கல்லூரி மைதானத்திற்கு வந்து போட்டிகளைக் கண்டுகளித்து வருகின்றனர். இந்நிலையில் “கிரிக்கெட் போட்டிகளை முதல்முறையாக நேரில் பார்க்கிறோம்” என்று ரசிகர்கள் நெகிழ்ச்சியுடன் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

வானொலியில் ஆங்கில வர்ணனையையும், பத்திரிகைகளில் கிரிக்கெட் செய்திகளை வாசித்து வளர்ந்த காலத்தில் இருந்தே, கிரிக்கெட் போட்டிக்கென மிகப்பெரிய ரசிகர் பட்டாளமே உள்ளது. ஒருநாள் நடந்த போட்டி பற்றி, ஒரு வாரத்திற்கெல்லாம் நண்பர்களிடம் பேசி மகிழ்ந்த காலங்களும் உண்டு.

தொலைக்காட்சியின் வருகைக்குப் பிறகு, பிறமொழி வர்ணனைகள் கிரிக்கெட் போட்டியின் நிலவரம் குறித்த புரிதலை ரசிகர்களுக்கு ஏற்படுத்தியது எனலாம். பிரத்யேக விளையாட்டுச் சேனல்கள், விளையாட்டு இதழ்கள், சமூக ஊடகங்களின் வரவு கிரிக்கெட் ரசிகர்களை தன்னிலைப்படுத்தின. டெஸ்ட், ஒரு நாள் போட்டி, டி-20, ஐ.பி.எல்., டி.என்.பி.எல். என தனது வடிவத்தை மாற்றிக் கொண்டு வருவதுதான், “கிரிக்கெட் போட்டி” தனது ரசிகர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முக்கிய காரணம்.

தலைமுறை, தலைமுறையாக ரசிகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டே செல்லும் விளையாட்டு என்றால், அது கிரிக்கெட் மட்டுமே. குழந்தைகளுக்குக் கூட பேட்டும், பந்தும் பரிச்சயமானவை. வேறெந்த விளையாட்டும் இவ்வளவு வேகமாக ரசிகர்களைச் சென்றடைந்ததில்லை.

கிரிக்கெட்டையும், வீரர்களையும், ரசிகர்களையும் தவிர்த்து விட்டு, விளையாட்டு பற்றிய தலைப்பில் அவ்வளவு எளிதாக பேசி விட முடியாது. சாதனை, தன்னம்பிக்கை, விடா முயற்சி போன்ற பண்புகளை கிரிக்கெட்டை வைத்துக் கொண்டே பேசி விட முடியும். தன்னுடைய மனம் கவர்ந்த வீரர்களின் விளையாட்டை, தொலைக்காட்சிகளில் கண்டு ரசிக்கும் ரசிகர்களில் சிலருக்கு மட்டுமே அவர்களின் ஆட்டத்தை நேரில் காணும் வாய்ப்பு கிடைக்கிறது. பெரும்பாலானோர் தொலைக்காட்சிகளிலேயே கண்டு களிக்கின்றனர். என்றாவது வீரர்களை நேரில் காண காத்திருக்கின்றனர். சர்வதேச போட்டிகள் நாட்டின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வரும் நிலையில், டி.என்.பி.எல். போட்டிகள் சிறு நகரங்களில் நடைபெற்று வருவது, ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி வருகிறது. இது கிரிக்கெட் போட்டிகள் வெகு தொலைவில் இருந்து ரசிகர்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

“கிரிக்கெட் போட்டிகளை முதல்முறையாக நேரில் பார்க்கிறோம்” என்று ரசிகர்கள் நெகிழ்ச்சியுடன் கூற நம்முடைய கல்லூரி மைதானம் ஓர் அரிய வாய்ப்பை ஏற்படுத்துக் கொடுத்துள்ளது நம்மையெல்லாம் பெருமைப்படச் செய்துள்ளது. அதிலும் நம்முடைய மாணவர்கள் வீரர்களாக களமிறங்கி பட்டையைக் கிளப்பி வருவது நமக்கு போனஸ் மகிழ்ச்சி.

# கல்விக் கண் திறந்த காமராஜர் நினைவலைகள்



விருதுபட்டியில் 1903-ம் ஆண்டு ஜூலை 15-ம் நாள் குமாரசாமிக்கும், சிவகாமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்து, குல தெய்வத்தின் பெயர் சூட்டப் பெற்றார் காமாட்சி. பின்னாளில் விருதுபட்டி, விருதுநகராக மாற்றப்பட்டதைப் போல், தாயாரால் பாசமாக 'ராசா' என்றழைக்கப்பட்ட அவர், காமராசு ஆனார்.

குடும்பச் சூழலால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டு, தனது மாமனின் துணிக்கடையில் வேலை செய்த போது, காங்கிரஸ் தலைவர்களின் உரைகளில் கவரப்பட்டார். அங்கு தான் அவரது மனதில் அரசியல் விதை முளைத்தது. ஆம். தனது 16-ம் வயதில் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானார்.

அதைத் தொடர்ந்து வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரகம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதன் விளைவாக சிறையிலடைக்கப்பட்டார். காமராசரின் அரசியல் ஈடுபாடும், கடின உழைப்பும் காங்கிரஸின் மேல்மட்டத் தலைவர்களை வெகுவாகக் கவர்ந்தது. விருதுநகர் நகராட்சித் தலைவராக்கப்பட்டார்.

பின்னர் ஆட்சித் தலைமையேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது, ராஜாஜியின் குலக்கல்வி திட்டம் தடுத்தது. கட்சிப் பொறுப்புகளும், ஆட்சி பொறுப்புகளையும் வகித்த அவர், முதல்வரானாதும் குலக்கல்வித் திட்டத்தைக் கைவிட்டார். இதனால் தமிழகத்தில் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகளவில் உயர்ந்தது. கல்விக் கண் திறந்த காமராஜராக எப்படியானார்?

ஒருமுறை காரணமாகக் காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது, அங்கு பள்ளி பருவச் சிறுவர்கள் முதியவர்களுடன் சேர்ந்து ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த காட்சியைக் காமராசர் காண்கிறார். காரை விட்டிறங்கி அங்கிருந்த பெரியவரை அழைத்து பேசும் போது, அச்சிறுவர்களிடம், "ஏன்பா பள்ளிக்கூடம் போகலயா?" என்ற கேட்க, அதற்கு "பள்ளிக்கூடத்துக்கு போனா இவங்க வயித்த யாருங்கய்யா கவனிக்கிறது" என்று அந்த முதியவர் வெகுளியாக கூறிய பதில், காமராசரை சற்றே சிந்திக்க வைத்தது. பதிலேதும் கூறாமல் புறப்பட்டுச் சென்றார். பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதற்கு உணவு தான் காரணமா? என்று தனது மனதில் எழுந்த கேள்விக்கு, 'மதிய உணவுத் திட்டத்தை' அறிமுகப்படுத்தி, பதில் கண்டார். மதிய உணவுக்காகவே ஏழை மாணவர்கள் பள்ளிகளை நோக்கிப் படையெடுத்தனர். பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது.

**"பள்ளியறியாத பிள்ளை பலபேரின் முகத்தைப் பார்த்தானம்மா**
**அது ஊரு சுற்றாமல் சோறுதான் போட்டு படிக்க வைத்தானம்மா"**

என்று பாடகர் திப்பு குரலில் 'காமராஜ்' என்ற திரைப்படத்தில் ஒலித்த பாடல் வரிகள் இதை நினைவூட்டுகின்றன.

இதேபோல், ஒருமுறை காமராசர் தனது அலுவலகத்தில் தொலைப்பேசியில் பேசிக் கொண்டிருக்கும் போது, கல்வி தொடர்பான கோப்புகளுடன் நுழைந்தார், கல்வி அமைச்சர். அப்போது, "பள்ளிகளில் 45 சதவீதம் மாணவர்கள் மட்டுமே படிப்பதாகவும், 55 சதவீத மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால் பள்ளிக்கு வர முடிவதில்லை" என்றும் தெரிவித்தார். "55 சதவீதம் பேர் கைநாட்டா இருந்தா நாடு என்னாகும்? கல்விய இலவசமா கொடுப்போம்" என்றார் காமராசர்.



அதற்கு அமைச்சரோ, “ஐயா இதனால் அரசு பெரும் நிதி நெருக்கடியைச் சுமக்க வேண்டி வரும்” என்று கூறியதற்கு, “வாங்க சேந்து சுமப்போம். விவசாயத்தைப் பெருக்குவோம். தொழில் வளத்தைப் பெருக்குவோம். பிள்ளைகள 3 கிலோ மீட்டருக்கு மேல நடக்க விடக்கூடாது. அதற்குள்ள ஒரு பள்ளிக்கூடம் இருந்தா, எல்லாரும் படிக்க வருவாங்க. 50 ஆயிரம் பள்ளிகள் திறப்பது நமது இலக்கா இருக்கட்டும்” என்றார், காமராஜர்.

இவ்வாறு கல்விக் கண் திறந்த காமராசரின் எவ்வளவு நினைவலைகளை அடுக்கிக் கொண்டே செல்வது. அவரைப் பற்றி பேச, பேச தெவிட்டாத இன்பம். படிக்க, படிக்க வியக்கும். பள்ளிக் கல்வியைக் கூட முழுமையாகத் தாண்ட இயலாத ஒரு மனிதன், எப்படி இப்படி மாமனிதரானார். நாட்டைத் தன் வீடாகாவும், மக்களை தன் உறவுகளாவும் நினைத்து எப்படி? வாழ்ந்திருப்பார் இந்த பெருந்தலைவர்.

**“நாடு பார்த்ததுண்டா? இந்த நாடு பார்த்ததுண்டா?**
**தன் வீடு பார்க்காமல், வாழ்வு பார்க்காமல்**
**நாடு முன்னேற நாளும் உழைத்தவனை நாடு பார்த்ததுண்டா?”**

என்ற பாடலொன்று, காமராசரின் வாழ்வியலை நம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிடும்.

கல்வி! கல்வி! என்று அனுதினமும் மாணவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த காமராசரின் கல்விக் கண்களை 1975-ம் ஆண்டு அவரது இமைகள் நிரந்தரமாக மூடச் செய்து விட்டது. நம்மையும் சொல்லொனாத் துயரில் தள்ளி விட்டது.

**முனைவர் த.சத்தியசீலன்,**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.**

# வண்ணத் தூரிகை







**Ancy Gratia A**

**(21105005) - I BCA S1**

## "I do"... Photography









**Sarabeshwaran S**

(20103113) - II B.Com S2

# SRCAS




## ROOM

1981 முதல்

# பிற்பகல்

தமிழ் நாளிதழ்

வெளியூர் 16.7.2022 சனிக்கிழமை

கோயம்புத்தூர் 15.7.2022 வெள்ளிக்கிழமை

RNI NO. 53622/91
CB/011/2021-23
Regd. No. TN/WR/CB/011/WPP/2018-20

ஸ்தாபக ஆசிரியர்: A.E.சலவன் அப்பாதுரை. ஆசிரியர்: M.N.சுதன் அப்பாதுரை. இதழ்: 42 – நாள்: 93. பக்கங்கள் 6. ரூ 6.00

# ஜூலை 15: இன்று காமராஜர் பிறந்தநாள்

## கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் நினைவலைகள்

"பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதற்கு உணவு தான்காரணமா? என்று தனது மனதில் எழுந்த கேள்விக்கு, 'மதிய உணவுத்திட்டத்தை' அறிமுகப்படுத்தி, பதில் கண்டார். மதிய உணவுக்காகவே ஏழை மாணவர்கள் பள்ளிகளை நோக்கிப் படையெடுத்தனர். பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது."



விருதுபட்டியில் 1903ம் ஆண்டு ஜூலை 15ம் நாள் குமாரசாமிக்கும், சிவகாமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்து, குல தெய்வத்தின் பெயர் சூட்டப் பெற்றார் காமராஜர். பின்னாளில் விருதுபட்டி, விருதுநகராக மாற்றப்பட்டதைப் போல், தாமராஜ் பாசமாக 'ராசா' என்றழைக்கப்பட்டவர், காமராசு ஆனார்.

[illegible]

### கல்விக் கண் திறந்த காமராசராக எப்படியானார்?

[illegible]



[illegible]

"நாடு பார்த்ததுண்டா?
இந்த நாடு பார்த்ததுண்டா?
தன் வீடு பார்க்காமல்,
வாழ்வு பார்க்காமல்
நாடு முன்னேற நாளும்
உழைத்தவனை நாடு பார்த்ததுண்டா?"

[illegible]

கட்டுரையாளர்:

முனைவர் த.சத்தியசீலன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி,
நவ இந்தியா, கோயம்புத்தூர்.

# Info Corner




## THE FIVE C's of RESILIENCE



# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

SNR SONS TRUST

A Unit of M/s SNR Sons Charitable Trust

Co-Ed, Accredited by NAAC with A+ Grade, Ranked 84th in NIRF 2021 | An ISO 9001:2015 Certified Institution

## PROGRAMMES OFFERED

### COMMERCE - UG
B.Com, B.Com (CA), B.Com (PA), B.Com (BPS), B.Com (IB), B.Com (IT), B.Com (CS), B.Com (B&I), B.Com (RM), B.Com (CMA), B.Com (A&F)

### MANAGEMENT SCIENCE - UG
BBA, BBA (CA)

### COMPUTING - UG
BCA, B.Sc (CS), B.Sc (IT), B.Sc (CS&CS),
B.Sc Computer Science and Data Analytics
B.Sc Computer Science
(Artificial intelligence and Data Science)

### SCIENCE AND HUMANITIES - UG
B.Sc (Electronics and Communication Systems), B.Sc (Maths), B.Sc (Physics), B.Sc (Chemistry), B.Sc (Biotechnology), B.Sc (CS & HM), B.A (Eng. Lit.),

### POST GRADUATE PROGRAMMES
MBA (AICTE Approved), MSW, M.Com, M.Com (IB), M.Sc (CS), M.Sc (IT), M.Sc (Maths), M.Sc (Electronics and Communication Systems), M.Sc (Biotechnology), M.A (Eng.Lit.)

**INTERNATIONAL EXPOSURE**

Do your Course/Semester abroad at
- Asia Pacific University, Malaysia
- Sunway University, Malaysia

**STATE-OF-THE-ART INFRASTRUCTURE**
- Flood Lit - Cricket
- Flood Lit - Fives Football
- Badminton, Basketball

**INDUSTRY INTEGRATION**
- Tata Consultancy Services
- IBM
- Google Certification
- TCS ION
- MAAC

**RANKED IN TOP 50 COLLEGES (ALL INDIA) BY LEADING MAGAZINES**

**SPECIAL FEATURES**
- ★ 27 Clubs for societies
- ★ 89 Job/Skill oriented courses
- ★ MOE's Innovation Centre for Idea to Innovation
- ★ DBT Star College
- ★ Sports scholarship for National and State Level Players

Medical concession to students, staff, parents and alumni at Sri Ramakrishna Hospital

www.srcas.ac.in




7373085666 | 9942320001

# ADMISSIONS OPEN
## FOR THE YEAR 2022 - 2023

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

Formerly SNR Sons College

**Re-Accredited with 'A+' Grade by NAAC**
**Ranked 84th in NIRF 2021**
**Coimbatore - 641 006, India.**



## CONVENOR

**Dr.D.Sampath Kumar**
Associate Professor - Information Technology

## COORDINATORS

**Media**
**Dr.T.Sathiyaseelan**
Assistant Professor - Tamil

**Technical**
**Dr.P.Manikandaprabhu**
Assistant Professor - Computer Science